முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: ௬ | 6–3–69 | வெள்ளி | ஒலி: 41

எமதர்மராஜனுடைய தர்பார் கூடுகிறது. எலும்பு அங்கிகளை அணிந்த வீரர்கள் இருமருங்கிலும் அணிவகுத்து நிற்கிறார்கள். கபால ஓடுகளில் தோரண விளக்குகள் கொலுமண்டபமெங்கும் ஏற்றி வைக்கப்பட்டு, ஒளிமங்கி விடாமல் தூண்டிவிடுவதற்காக அடிக்கடி மனிதக் கொழுப்பு வார்க்கப்பட்டு, நரம்புத்திரிகளும் இடப்படுகின்றன. ஒரு பயங்கரமான உருவம் தலையை மேலே தூக்கி விழி பிதுங்குவதுபோல உரத்தக் குரலெடுத்து 'அய்யோ! அய்யோ!!' என்று கத்துகிறது. அதுதான் சபைக்கு மன்னன் வருவதை அறிவிக்கும் ஒலிக் குறிப்பு!

அந்த ஒலியை அடுத்து நான்கு எருமை மாடுகள் பட்டுத் துணிகளால் அலங்கரிக்கப்பட்டு நடைபோட்டு வருகின்றன. அதற்கடுத்து, எமதர்மன் இரண்டு முரடர்களின் தோள் மீது உட்கார்ந்துகொண்டு பிரேதங்களால் அமைக்கப்பட்ட ஆசனத்தின் பக்கம் வந்து இறங்குகிறான்.

சபையில் ஒரே ஆரவாரம் — "அய்யோ!" என்ற மகிழ்ச்சிகரமான வரவேற்பு! ஆஸ்தானப் புலவர் கவிஞர் **ஒப்பாரி** எழுந்து வாழ்த்து கீதம் வழங்குகிறார். அடுத்தாற்போல் **கொள்ளிச்சட்டி** நடனம் ஆரம்பமாகிறது. வடிவழகி **வாய்க்கரிசி** தலைமை ராஜநர்த்தகியாக நடனத்தில் பங்கு கொள்கிறாள். ரத்தத்தால் சிவப்பாக்கப்பட்ட உதடுகளையும் மீறிக்கொண்டு வெளியே தலை நீட்டியிருக்கும் ஆனைத் தந்தம் போன்ற பற்களின் ஒளியிலே எமன், உள்ளத்தைப் பறிகொடுக்கிறான். நடனமணிகள் ஒவ்வொருவரையும் பாசக் கயிற்றால் பிணைத்துத் தழுவிப் பரிசளித்து அனுப்பிவைக்கிறான்.

கொலுமண்டபத்து நித்திய நிகழ்ச்சிகள் துவங்கப்படுகின்றன என்று சித்திராபுத்திரன் அறிவிக்கிறான்.

மன்றத்துப் பிரதானியர் அனைவரும் தங்கள் தங்கள் பாடையில் பேசுகிறார்கள். [பாடை என்பது இங்கே பாஷையைக் குறிக்கும்.]

எமலோகத்தின் பல பகுதிகளிலுமிருந்தும் வந்திருப்போர் தங்கள் குறைகளைத் தெரிவித்துக் கொண்டபோது எமதர்மராஜன் சற்றுக் கண்ணயர்ந்துவிடவே,

அருகேயுள்ள சித்திராபுத்திரன் அவனை எழுப்பிவிட்டு அவையினரின் பாராட்டைப் பெறுகிறான். மன்னனின் விசாரணை ஆரம்பமாகிறது.

எமன்: இதுவரையில் மன்றத்துப் பிரதிநிதிகளின் பேச்சுக்களைக் கேட்டேன். சுடுகாட்டில் இருக்க வேண்டிய நீங்கள் இந்தச் சபைக்கு வந்து ஏன் என் உயிரை வாங்குகிறீர்கள்?

ஒரு பிரதிநிதி: ஒழுங்குப் பிரச்சினை! ஒழுங்குப் பிரச்சினை! சபாநாயகர் அவர்களே! உயிர் வாங்கும் வேலை மன்னருக்குத்தான் உரியதே தவிர எங்களுக்கல்ல.

எல்லோரும் சபாநாயகரின் இருப்பிடத்தைப் பார்க்கிறார்கள். அவர் அன்று சபைக்குத் தாமதமாகத்தான் வருவார் என்று சித்திராபுத்திரன் அறிவித்துவிடவே ஒழுங்குப் பிரச்சினை கைவிடப்படுகிறது. மீண்டும் எமனின் விசாரணை தொடர்கிறது.

எமன்: நான் பேசும்போது யாராவது குறுக்கே பேசினால் மீண்டும் உங்களுக்கெல்லாம் உயிர் கொடுத்து, பசி, பிணி, களைப்பு, தூக்கம் முதலிய உணர்ச்சிகளை உண்டாக்கி விடுவேன். எமலோகத்திலே குடியேறியிருக்கிற உங்களையெல்லாம் மறுபடியும் பூலோகத்துக்குத் துரத்தி அங்கு கஷ்டப்படாமல் காப்பாற்றி வருகிறேனே; அதற்காகவாவது நீங்கள் எனக்கு அடங்கி நடக்க வேண்டாமா?

ஒரு குரல்:

ஒருவருக்கு அடங்கி நடப்பது என்பது சர்வாதிகாரமல்லவா? எங்கே ஜனநாயகம்? எங்கே ஜனநாயகம்?

எமன் மிகவும் ஆத்திரத்துடன் எழுந்து ஒரு பிரதிநிதியின் தலையை நறநறவென்று மென்று தின்றுவிட்டு ஏப்பம் விட்டவாறு,

"யாரடா அது; தடுத்தும் கேளாமல் தகாத வார்த்தை பேசுவது? ஒழுங்காயிருக்கிறீர்களா? அல்லது உயிர் கொடுத்து உங்கள் தாய் உலகத்துக்குத் திருப்பி அனுப்பி விடவா?

எல்லோரும்: வேண்டாம் பிரபு! ஒழுங்காயிருக்கிறோம்!

எமன்: உங்களைச் சொல்லிக் குற்றமில்லை. நீங்கள் எல்லாம் குடியேறியவர்கள் என்பதை மறந்துவிட்டு இந்த நாட்டிலேயுள்ள பேய்களும், பிசாசுகளும் உங்களுக்குப் பொதுத் தேர்தலிலே ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்களே, அவர்களைச் சொல்லவேண்டும். போகட்டும்; சித்திராபுத்திரரே! இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை சபையின் முன்னே படித்துத் தொலையும்.

சித்ரா: படித்துத் தொலைக்கிறேன் மன்னவா!

ஒரு பிரதிநிதி, நடுக்கத்தோடு எழுந்து,

"தர்மப்பிரபு! நிதிநிலை அறிக்கையின் பிரதிகள் எங்களுக்குத் தரப்பட்டிருக்கிற காரணத்தால் நாங்களே படித்துத் தெரிந்து கொள்கிறோம். சித்ராபுத்ரரைப் படிக்கச் சொல்லி நேரத்தை வீணாக்க வேண்டாம் என்பது எங்கள் தாழ்மையான விண்ணப்பம்."

எமன்: சரி! உருப்படியான யோசனை! ஏற்றுக் கொண்டேன். நிதிநிலை அறிக்கையின் முக்கியக் குறிப்புகளை மட்டும் உங்களிடம் சுருக்கமாகச் சொல்லுகிறேன். சென்ற ஆண்டு நமது நாட்டில் உயிர் ஏற்றுமதி சற்று தாராளமாக இருந்தது. இந்த ஆண்டு இந்தியத் துணைக் கண்டத்திலும் குடும்பக் கட்டுப்பாடு அமுலாக்கப்பட்டு விட்டதால், இங்கு தேங்கிக் கிடக்கும் உயிர்களை அதிக அளவு ஏற்றுமதி செய்ய இயலவில்லை. இதனால்

[தொடர்ச்சி பக்கம்—4]



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

27. அரேபியாவின் தீர்க்கதரிசி

அன்புள்ள மாதவி,

பாலை நிலத்தில் பழமுதிர்ச் சோலையென்றால் ஆச்சரியப்படத்தான் செய்வாய்! அரேபியாப் பாலை நிலத்தில் அப்படித் தோன்றியவர்தான், நபிகள் நாயகம். நிலம் மட்டுமல்ல; மக்களினுடைய உள்ளமும் அன்பு வறண்ட பாலையாகத்தான் அங்கே இருந்தது. அந்தப் பாலையில்தான் அன்பு மழை பொழியச் செய்து, பசுமை கூட்டும் வயல்களையும் பழமுதிர்ச் சோலைகளையும் உண்டாக்கினர், முகம்மது என்ற அந்தத் தீர்க்கதரிசி! அவர் தோற்றுவித்த இஸ்லாம் மதத்தை உலக மக்களில் முப்பது கோடிப் பேர் இன்றும் பின்பற்றி வருகிறார்கள்.

வறுமையும் வளமும், தோல்வியும் வெற்றியும், நட்பும் குரோதமும், தொல்லையும் செல்வாக்கும் —இப்படியாக எல்லா முரண்பட்ட சக்திகளுக்கும் ஆட்பட்டு அனுபவம் என்ற பள்ளியில் நிறைவான கல்வி பயின்றவர் முகம்மது! அறியாமையில் மூழ்கி, மனம் போனபடி—தான்தோன்றித்தனமாக வாழ்ந்த மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்கி, அவர்களை நல்வழிப்படுத்த அவர் பட்ட கஷ்டங்கள் கள் ஏராளம்! அதன் பலனாகத்தான், "கடவுள் ஒருவரே; அவருடைய தூதுவரே முகம்மது!" என்ற குரல் நூற்றாண்டு காலமாக உலகின் மூலைமுடுக்கெல்லாம் ஒலித்த வண்ணமாக இருக்கிறது.

கி. பி. 570-ல் உயர்ந்த குடும்பமொன்றில் முகம்மது பிறந்தார். ஏப்ரஹாம், இஷ்மெயில் போன்ற தீர்க்கதரிசிகளின் சந்ததியில் வந்தவர் முகம்மது என்று தெரிகிறது. முகம்மதுவின் தந்தையான அப்துல்லா, முகம்மது பிறப்பதற்கு முன்பாகவே இறந்துபோய் விட்டார். முகம்மதுவின் தாயான அமீனா, முகம்மது ஆறு வயதுப் பாலகனாக இருக்கும் பொழுதே காலமானார். ஆகவே அபூடலீப் என்ற தன்னுடைய சிறிய தந்தையால் முகம்மது வளர்க்கப்பட்டார். அபூடலீப் பெற்றோரற்ற இந்தச் சிறுவனிடம் அதிகப்படியான அன்பும் பாசமும் காட்டினார்.

முகம்மது 12 வயதுச் சிறுவனாக இருந்தபொழுது, வியாபார நிமித்தமாக சிரியாவுக்குச் சென்ற அபூடலீப் முகமதுவையும் தன்னுடன் அழைத்துச் சென்றார். சிரியா நாட்டில் பலவிதமான மக்களோடு பழகும் வாய்ப்பு முகமதுவுக்குக் கிடைத்தது. பல மதங்களைப் பற்றியும் நிறையத் தெரிந்து கொண்டார். பல்வேறு அரேபிய இனத்தாரிடையே நிலவிய பூசலையும் பிணக்குகளையும், அதனால் விளைந்த சண்டைகளையும் பார்த்த முகம்மது மக்களிடையே நிலவிடும் ஒற்றுமையின்மையைக் கண்டு மிக வருந்தினர். அந்தக் காலத்திலேயே தனக்கிட்ட எந்த வேலையையும் ஒழுங்காகச் செய்து முடிக்கும் நேர்மைத் திறம் பெற்றிருந்த முகம்மது 'அல் அமீன்' — நம்பிக்கைக்குப் பாத்திரமான—என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார்.

அப்பொழுது அரேபியாவில் குரேஷ் என்ற அரேபிய இனத்தைச் சார்ந்த கதிஜா என்ற பணக்காரச் சீமாட்டி ஒருவர் இருந்தார். அவர் விதவை. அந்த அம்மையாரின் வியாபாரப் பொறுப்பை முகம்மது ஏற்றுக் கொள்ளும்படி அபூடலீப் ஏற்பாடு செய்தார். இளமையும் இனிய பண்புகளும் ஒருங்கே அமையப்பெற்ற முகம்மது அந்த அம்மையாரின் உள்ளத்தைக் கவர்ந்தார். இருவருக்கும் திருமணம் நடந்தது. அப்பொழுது முகமதுவுக்கு வயது இருபத்தைந்து; கதிஜாவுக்கு வயது நாற்பது! இந்தத் திருமணத்தின் விளைவாக அவர்களுக்கு இரண்டு ஆண்களும் நான்கு பெண்களும் பிறந்தனர். அவற்றில் ஃபாத்திமா (Fatima) என்று ஒரு பெண் குழந்தை மட்டுமே மிஞ்சியது! கதிஜா, தனது அறுபத்திஐந்தாவது வயதில் மாண்டு போனர். அப்பொழுது முகம்மதுவுக்கு வயது நாற்பது. அக்காலத்தில் அரேபியாவில் பலதார மணம் சர்வசாதாரணமாயிருந்தும், கதிஜா உயிருடன் இருக்கும்வரை முகம்மது வேறெந்தப் பெண்ணையும் திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதிலிருந்து அவர்களுடைய இல்லறம் சுமுகமாகவே நடந்திருக்க வேண்டுமென்று நாம் யூகிக்கலாம். கதிஜாவின் மரணத்துக்குப்பின் மெக்காவிலிருந்த சவுதா என்ற விதவையை முகம்மது திருமணம் செய்து கொண்டார். பின்னர் அவர் மெடினாவுக்குச் சென்றபொழுது தனது ஆருயிர் நண்பரான அபூபக்கரின் மகள் ஆயிஷாவைத் திருமணம் செய்து கொண்டார்.

மெக்காவில் வாழ்ந்த முகம்மது அங்கிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள ஹீராமலையின் அடிவாரத்துக்குப் போய்த் தியானத்தில் அமர்வது வழக்கம். அப்படி அவர் தியானத்தில் இருந்த பொழுது ஒருநாள் தெய்வீகக் குரலொன்று அரேபியாவில் நிலவிடும் சிலைவழிபாட்டை ஒழிக்கும்படியாகவும், சர்வ வல்லமை வாய்ந்தவரும் இரக்கமே உருவானவருமான ஒரே கடவுளின் பெருமையை மக்களுக்கு உணர்த்தும்படியாகக் கட்டளையிட்டதாகவும் கூறப்படுகிறது, அதிலிருந்து முகம்மது அந்தத் தேவ கட்டளைப்படி பணிபுரியத் தொடங்கினர். ஆனல் அந்த வேலை அவ்வளவு சுலபமானதாயில்லை. மெக்காவெங்கும் சிலை வழிபாடு செல்வாக்குப் பெற்றிருந்த நேரம். அந்த ஒரு நகரில் மட்டும் முன்னூற்று அறுபத்தி ஐந்து சிலைகள் வழிபாடு செய்யப்பட்டன. முகம்மதுவின் உபதேசம் அவரைப் பொது ஜன விரோதியாக்கியது.

முதலில் முகம்மதுவின் கொள்கைக்கு மாறியவர் அவருடைய மனைவி கதிஜாதான்! முதல் மூன்று நான்கு வருஷங்களில் அவருடைய கொள்கையினால் மாறியவர்கள் சுமார் நாற்பது பேரே இருக்கும். கி. மு. 619-ல் அவருடைய மனைவி கதிஜா இறந்து போனர். 620-ல் அவரைப் போற்றி வளர்த்த அபூடலீப்பும் மாண்டுபோனர். இருவருடைய மரணமும் முகம்மதுவின் வாழ்க்கையில் பேரிழப்பாக இருந்தன. எதிர்ப்பு பெரிய அளவில் உருவாகி நிற்கின்ற நிலையில் இரு பெரும் சக்திகளை முகம்மது இழந்தார்.

கி. பி. 622-ல் முகம்மதுவின் எதிரிகள் அவரைக் கொல்லுவதற்குச் சதி செய்தனர். அந்தச் சதியிலிருந்து தப்ப, முகம்மது மெக்காவிலிருந்து மெடினாவுக்கு ஓட்டம் பிடித்தார். இந்த ஆண்டைத் தொடக்கமாக வைத்துத்தான் இஸ்லாமியர்கள் தங்கள் காலண்டரை அமைத்துக்கொண்டனர். மெக்காவிலிருந்து முகம்மது மெடினா சென்ற நிகழ்ச்சி வரலாற்றில் ஹிஜிரா (Hegira) என்று அழைக்கப்படுகிறது.

மெடினாவில் முகம்மது சற்று நிம்மதியாகக் காலம் கழிக்க முடிந்தது. இஸ்லாமிய வரலாற்றில் முதல் மசூதி (Mosque) மெடினாவில்தான் கட்டப்பட்டது. மெடினாவில் முகம்மதுவுக்கு ஆதரவு வளர்ந்தது. அங்கே முகம்மதுவைப் பின்பற்றிய இஸ்லாமியர்களுக்கும், மெக்காவில் வாழ்ந்த சிலைவழிபாடு செய்வோருக்குமிடையே போர் மூண்டது. மெக்காவுக்கு நூற்று இருபது மைல் தூரத்திலுள்ள பாதிர் என்னுமிடத்தில் முன்னூறு இஸ்லாமியர்களை மெக்காவாசிகள் பலமாகத் தாக்கினர். அப்பொழுது ஆண்டவனை நோக்கி முகம்மது செய்த பிரார்த்தனையே இஸ்லாமியர்களைக் காப்பாற்றியதாக நம்பப்படுகிறது.

இம்மாதிரி சிலைவழிபாடு செய்வோருக்கும் முகம்மதுவின் கொள்கையைப் பின்பற்றிய இஸ்லாமியர்களுக்குமிடையே மூன்று நான்கு முறை போர்கள் நடந்தன. நான்காவதாக நடந்த போரில் முகம்மதுவின் தலைமையில் இஸ்லாமியர்கள் மெக்கா நகரை வென்றனர். மெக்காவின் கோயில்களிலிருந்து சிலைகள் அகற்றப்பட்டு முகம்மதுவின் கொள்கைப்படி அவை புனிதப் படுத்தப்பட்டன.

தன் பணி வெற்றிபெற்ற பின்பே, கி. பி. 632-ல், தனது இளம் மனைவி ஆயிஷாவின் கரங்களிலிருந்தபடியே முகம்மது உயிர் நீர்த்தார்.

கால்த்தை ஒட்டிப் பார்க்கின்ற பொழுது, இஸ்லாம் போதித்த கொள்கைகள் புரட்சிகரமானவை என்பதில் சந்தேகமில்லை. இதர மதங்களும் கோட்பாடுகளும் வலியுறுத்தத் தவறிய பல விஷயங்களை முகம்மதுவின் மதமான இஸ்லாம் வலியுறுத்துகிறது.

இஸ்லாம், ஒரே ஒரு கடவுளைத்தான் (Monotheism). ஒப்புக் கொள்கிறது. தத்துவார்த்தங்

[தொடர்ச்சி ப்க்கம்—7]

அறிக்கை:

"முரசொலி"

1. வெளியாகும் இடம்	:	4—128, மவுண்ட் ரோடு, சென்னை—6.
2. வெளியிடும் நாட்கள்	:	வாரம் ஒரு முறை (வெள்ளி தோறும்)
3. அச்சிடுவோரின் பெயர்	:	மு. கருணாநிதி,
இனம்	:	திராவிடர்,
முகவரி	:	4—128. மவுண்ட் ரோடு, சென்னை—6.
4. வெளியிடுவோரின் பெயர்	:	மு. கருணாநிதி,
இனம்	:	திராவிடர்
முகவரி	:	4—128, மவுண்ட் ரோடு, சென்னை—6.
5. ஆசிரியரின் பெயர்	:	மு. கருணாநிதி,
இனம்	:	திராவிடர்,
முகவரி	:	4—128, மவுண்ட் ரோடு, சென்னை—6.
6. பத்திரிக்கையின் உரிமையாளர்களுடைய பெயர்களும் முகவரியும்—அல்லது பத்திரிகையில் ஒரு சத விகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவர்களின் பெயர்களும் முகவரிகளும்.		மு. கருணாநிதி, 4—128 மவுண்ட் ரோடு. சென்னை—6.

என் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்த மட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று மு. கருணாநிதியாகிய நான் அறிவிக்கிறேன்.

1—3—59

(ஒப்பம்) மு. கருணாநிதி
வெளியிடுபவர்.

வெள்ளி 6—3—59 சென்னை

நகரசபைத் தேர்தல்!

தமிழகமெங்கணும் உள்ள நகரசபைகளில் வரும் 11—ம் நாள் முதல் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பெரும் பொறுப்பை ஆங்காங்குள்ள நகரத்துக் குடிமக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் நகர் வளம் பெறவும், செழுமையுறவும் தக்கது செய்வார் இவர் எனத் தேர்ந்து, நன்முடிவினை நல்கிடும் வாய்ப்புப் பெற்றவர்கள் கிடைத்திடும் நேரத்தையும் கடமையினையும் விழலுக்கிறைக்கும் நீராக்கிவிடக் கூடாதென்பதுதான் ஜனநாயகத்தின்பால் பற்றுக் கொண்டவர்களின் நீங்காத கவலையாகும்.

எமது கட்சியின் சார்பில் ஆட்சி அமையுமானால் எந்தெந்தத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவோம்—எத்தகைய சட்டங்களைத் தீட்டிடுவோம் என்று தேர்தல் பிரகடனம் வெளியிட்டு, எண்ணிக்கை பலமிக்கவர்கள் தங்கள் கட்சியின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் சட்டமன்ற—பாராளுமன்றத் தேர்தல்களைப் போன்றதல்ல, நகரசபைத் தேர்தல்!

இந்தக் கருத்தினை நமது கழகம் பன்னெடு நாட்களாகக் கூறி வருவதோடு, நகராண்மைக் கழகங்களில் கட்சி அடிப்படையில் போட்டியிடத் தேவையில்லையென்பதையும் பிற கட்சிகளுக்கு வலியுறுத்தி வந்திருக்கிறது. ஆனால் வழிகாட்டிகளாக இருந்திட வேண்டிய ஆளுங்கட்சியினர், வலுச் சண்டைக்கு வரும் போக்கினை மேற்கொண்டு "யார் என்ன சொன்னபோதிலும் கவலையில்லை. நாங்கள் கட்சி சார்பிலேதான் போட்டியிடுவோம்" எனத் தேசியப்பறை கொட்டித் தேர்தல் களத்திற்குப் புறப்பட்டு விட்டனர். முள்ளை முள்ளால்தான் எடுத்திட வேண்டும் என்ற நிலையில் கழகத் தோழர்களும் பல நகரங்களில்—குறிப்பிட்ட சில இடங்களில் கழகச் சார்பில் போட்டியிட முன்வந்து கழகத்தின் நேரடி ஆதரவைப் பெற்றுள்ளனர். இன்னும் சிலர் கழகத் தோழர்களின் பேராதரவு மட்டுமே போதுமானது; கழக முத்திரையில் நின்றிடத் தேவையில்லை என்று கூறி காங்கிரசை எதிர்த்து நிற்கின்றனர்.

இந்த முடிவுகள், எப்படியும் நகரசபையில் காங்கிரசின் ஏகபோக ஆதிக்கம் உருவாகாமல் தடுப்பதற்காக எடுக்கப்பட்டவைகள் என்பதை அரசியல் தெளிவு படைத்தவர்கள் வழுவற உணருவார்கள்.

கட்சிச் செல்வாக்கை வளர்த்து, தேவையற்ற துறையில் கட்சி ஆதிக்கத்தையும் உச்சாணிக் கொம்பிலே ஏற்றி உட்கார வைப்பதற்காக அரும் பிரயத்தனம் எடுத்துக் கொண்டுள்ள ஆளுங் கட்சியினருக்கு நமது கழகத்தினரின் போக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதற்கு அடையாளமாக அமைச்சர்களின் பேச்சுக்கள் அமைந்திருக்கின்றன.

கோபியிலே பேசிய நிதியமைச்சர் சுப்பிரமணியம், "நாடாளும் கட்சி காங்கிரஸ்தான். நகரசபைகளிலும் காங்கிரஸ் ஆதிக்கம் ஏற்பட்டால்தான் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள இயலும். ஆகவே இந்தத் தேர்தலில் காங்கிரசை நட்டாற்றில் விட்டுவிடாதீர்கள்" என்ற கருத்துப்படக் கதறிக் கண்ணீர் மல்கிக் கசிந்துருகியிருக்கிறார்.

ஒப்பாரி மேட்டிலே இவர் ஒலியெழுப்ப—அதே நேரம் ஓங்காரக் கூச்சலிட்டு, தூங்குகின்ற ரங்கநாதரையும் எழுப்பிடும் விதத்தில் திருவரங்கத்தில் அமைச்சர் பக்தவத்சலனார் 'ஆலோலம்' பாடியிருக்கிறார்:

"காங்கிரஸ் பெரும்பான்மை பலமுள்ள நகரமன்றங்கள் அமையாவிட்டால், அந்த நகரத்துத் தேவைகளை சுலபமாகப் பூர்த்தி செய்து கொள்ள முடியாது. அதாவது அரசினரின் அபயம் வேறு கட்சி நகரசபைகளுக்கு அவ்வளவு எளிதில் கிட்டாது!"—இந்தப் பொருள் பட மிரட்டல் மொழிகளை வாரியிறைத்து வாக்காளர்களை எச்சரித்துத் திரும்பியிருக்கிறார்.

இதற்குப் பெயர்தான் இந்தப் பொன்னான திருநாட்டில் ஜனநாயகமாம்! அந்தோ ஜனநாயகமே! உன் மென்மையான குரல்வளையை எவ்வளவு லாவகமாக நெறித்துக் கொல்லுகிறார்கள்—என்று நீதியும் (…)ர்மையும் கண்ணீர் வடிக்கின்றன.

அமைச்சர்களின் வாதமாவது சரியா என்று சிந்தித்தால் காங்கிரஸ் நகராட்சி மன்றங்கள் எத்தனையோ கழுதை புரண்ட களமாகக் காட்சி தருகிற விந்தையைக் கண்கூடாகக் காணலாம்! புழுதி கிளம்பும் வீதிகள்—பொங்கி வழியும் சாக்கடைகள்—இருள் படிந்த தெருக்கள்—இழவு வீட்டு எழில் காட்டும் பெருநகர்த் தோற்றம்—இத்தனையும் காங்கிரசார் ஆதிக்கம் பெற்ற நகராட்சியில் மிக மலிவு! இந்த அவலட்சணங்கள், தங்களை நிலைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளாமல் எதிரியின் முகத்தில் எத்தனை மருக்கள் என்று எண்ணிப் பார்த்துக் கணக்கு எழுதி வைக்கப் பேரேடு சகிதம் புறப்பட்டு விட்டன என்பதுதான் விந்தையிலும் விந்தை!

தேர்தல் சந்தடியில் வழக்கமாகக் கிளம்பும் அரசியல் வௌவால்கள் காங்கிரஸ் முத்திரையை நெற்றியிலே குத்திக் கொண்டு ஆங்காங்கு விடுதலை வீரர்களைப்போல கம்பீரமாக ஓட்டு வேட்டைக்கு வில் வளைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

★ நீ யார்?
★ தேசீயப் போராட்டப் பரம்பரையா?
★ திருப்பூர் குமரனைத் தெரியுமா?
★ செக்கிழுத்த சிதம்பரம் பெயர் கேள்விப்பட்டிருக்கிறாயா?
★ விடுதலைப் போரில் கொடி பிடித்தாயா?
★ சிறை சென்றாயா?
★ சித்திரவதைப்பட்டாயா?
★ அடிபட்ட தழும்பு உண்டா?
★ ஆதரவாவது காட்டியிருக்கிறாயா?

—இந்தப் பட்டியலில் எந்தக் கேள்விக்கும் விடை தேவையில்லை; ஏனெனில் கேள்வியே எழுவதில்லை!

★ நீ யார்?
★ பணக்காரனா?
★ தேர்தலில் பத்தாயிரம் செலவு செய்வாயா?
★ இந்தா பிடி, தொப்பியை!
★ அதுகூட வேண்டாமா?
★ காளை மாட்டுச் சின்னத்தைப் பெற்றுக் கொள்!
★ இன்று முதல் நீ காங்கிரஸ் தியாகி!
★ எப்படியாவது—எந்த வழியிலாவது—வெற்றி பெற்றுத் தீர வேண்டும்!

— நகர சபைத் தேர்தலில் போட்டியிடுகிற காங்கிரஸ்காரர்களில் மிகப் பெரும்பான்மையோர் இந்த ரகத்தினர்.

பொதுப் பணியின் விளிம்பைக்கூடத் தொட்டறியாதவர்கள், கதர் உடைக்குள் புகுந்துகொண்டு வாக்குரிமை பெற்றவர்களைக் காசு பணத்தால் அடித்து வீழ்த்தி அப்படிப் பெற்ற அவமானகரமான வெற்றியைக் கீர்த்தி வாய்ந்த மணிக் கிரீடம் என்று நினைத்துத் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள். அதற்கு இந்த நாட்டு மக்களும் பல நாட்களாக இடமளித்துத்தான் வருகின்றனர். ஒருநாள் வாழ்க்கைச் செலவுக்குத் தரப்படுகின்ற வெண் பொற்காசுகளுக்கு மதிப்பளித்து, பலருடைய வாழ்க்கையை—நகரின் வளத்தை—நாட்டின் நலனைச் சீரழிக்கும் மன்னிக்க முடியாத மாபாதகத்தைச் செய்து வரும் வாக்காளர்கள், இனியாவது தங்கள் செயலுக்கு வருந்திக் கழுவாய் தேடித் தீரவேண்டும்.

அந்தப் பிராயச்சித்தத்திற்கு ஒரு பொன்னான வாய்ப்பு இப்போது காத்திருக்கிறது.

வாக்காளனே!

சுயமரியாதைக்கு மதிப்பு அளிப்பவனே!

உன் கையிலே ஒப்படைக்கப்பட்டுள்ள வாக்குரிமை கடைச் சரக்கல்ல! அது ஒரு கடமை என்பதை உணர்ந்துகொள்! அதை நேரான வழியில் பயன்படுத்து!

காந்தி பெயரைச் சொல்லி—காங்கிரஸ் பெயரைச் சொல்லி இனியும் ஊரை ஏமாற்ற முடியாது என்ற உனது அறிவிப்பைச் செயல் மூலம் காட்டு!

கண்ணியம் வாய்ந்த கழகத்தின் தோழர்கள் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றத் தேர்தல் களத்தில் நிற்கிறார்கள். அவர்கள் கையிலே பணாயுதம் இல்லை! அதிகார அம்புகள் கிடையாது! சந்தர்ப்பவாதமென்னும் சக்ரவியூகம் அமைப்பவர்கள் அல்ல, அந்தக் கழகக் காளைகள்! மக்கள் தொண்டே மனதில் கொண்டவர்கள்! நல்ல நெஞ்சே அவர்களின் போர்க்கருவி—சாதாரணமானவர் — சாமானியர்கள் — ஏழையர் இயக்கத்தின் முன்னோடிகள்—அவர்கள் உங்கள் நகருக்கு இடையறாப் பணியாற்ற உங்களின் ஆதரவை வேண்டுகிறார்கள்; நேசக்கரம் நீட்டுகிறார்கள்! அவர்களுக்குக் கைகொடுங்கள்! ஆணவக்காரர்களை—ஆஸ்திபாஸ்தி காட்டி மிரட்டுபவர்களை—வாக்குரிமைகளை ஏலச்சீட்டாக்குகிறவர்களை—என்றென்றும் தலையெடுக்க முடியாத அளவுக்குத் தோல்விப் படுகுழியில் தள்ளுங்கள்!

உங்கள் கரத்திலே இருக்கும் வாக்கு, விலைபொருள் அல்ல.
அந்த வாக்குச் சீட்டு உங்கள் பிள்ளைக்குச் சமானம்!
உங்கள் மனைவிக்குச் சமானம்!
அதை விற்றால் போய்விடும், மானம்!
உணருவீர்! உணருவீர்!!

தலைமைக் கழக அறிக்கை எண்: 5-59

தி. மு. கழகப் பொது உறுப்பினர்
புதுப்பித்தல்-சேர்த்தல்
குறித்து
பொதுச்செயலாளர் அறிக்கை

1. புதுக்கோட்டை பொதுக்குழுவில் முடிவெடுத்தபடியும், கழகத்தின் பொதுத் தேர்தல் அண்மையில் நடைபெற ஆவன செய்யப்பட வேண்டியதையொட்டியும், சிற்றூர்—பேரூர்—நகரக் கிளைகள் தத்தமது தற்போதைய உறுப்பினர்களைப் புதுப்பித்தும் புதிதாகச் சேரவிருக்கும் உறுப்பினர்களைச் சேர்த்தும் தலைமைக் கழகத்திற்கு அனுப்ப 1—4—59-ஆம் நாளிலிருந்து 30—6—59-ஆம் நாள் வரையில் காலம் வரையறுக்கப்பட்டுள்ளது.
2. உறுப்பினர் கட்டணம் வழக்கமான முறைப்படியே ஒவ்வொரு உறுப்பினரிடமும் 50 புதுக்காசுகள் விதம் வசூலிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு உறுப்பினர் கட்டணத்திலும் 25 புதுக்காசுகள் அந்தந்த கிளைக் கழகங்களால் வைத்துக் கொள்ளப்பட்டு, மீதமுள்ள 25 புதுக்காசுகள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.
3. உறுப்பினர்கள் புதுப்பிக்கப்படுதலும் புதிதாகச் சேர்க்கப்படுதலும் அதற்கெனத் தலைமைக் கழகத்தால் அச்சிடப்பட்டு அனுப்பப்பெறும் விண்ணப்பத்தாள்களில்தான் பதிவு செய்யப்பட்டுத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும். வெற்றுத் தாளிலோ—வேறு முறையான தாள்களிலோ பதிவு செய்து அனுப்பப்படும் உறுப்பினர்களின் விவரங்கள் பதிவுசெய்து கொள்ளப்படமாட்டா.
4. தலைமைக் கழகத்தால் அச்சிடப்பெற்ற உறுப்பினர் பதிவு விண்ணப்பத் தாள்களை அந்தந்த மாவட்டச் செயலாளரிடமோ, அல்லது அவரால் அறிவிக்கப்பட்ட பொறுப்பாளரிடமோ பெற்றுக் கொள்ளலாம். தலைமைக் கழகத்திலிருந்து உறுப்பினர் பதிவு விண்ணப்பத் தாள்கள் கிளைக் கழகங்களுக்கு நேரடியாக அனுப்படமாட்டா.
5. உறுப்பினர்கள் சேர்க்கும் பணி, கிளைக் கழகச் செயலாளர்கள் மூலமும், கிளைக் கழகங்கள் நிறுவப் பெறாத—ஆனால் நிறுவப் பெறும் நிலையிலுள்ள ஊர்களில் மாவட்டச் செயலாளராலோ அல்லது மாவட்டச் செயலாளரால் நியமிக்கப்படும் வட்டப் பொறுப்பாளராலோ, நியமிக்கப்படும் பொறுப்பாளர் மூலமும் தான் நடைபெற வேண்டும். கிளையின் செயலாளர் அல்லது உருவாகப் போகும் கிளையின் பொறுப்பாளர் ஆகியவரின் கையொப்பத்தோடுதான் தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
6. புதுப்பிக்கப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் கட்டணத் தொகையில் சரி பகுதியை (ஒவ்வொருவர்க்கும் 25 புதுக்காசு விதம்) தலைமைக் கழகத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பி, அந்தப் பற்றுச் சீட்டை (இரசீதை) உறுப்பினர் விவரங்களடங்கிய தாள்களுடன் இணைத்துத் தலைமைக் கழகத்திற்கு நேரடியாக அனுப்பவேண்டும்.
7. உறுப்பினர் கட்டணத் தொகையையும், உறுப்பினர் தாள்களையும் அனுப்புகின்றவரின் தெளிவான முகவரியுடன், 'பொதுச் செயலாளர், தி. மு. க., 'அறிவகம்', சென்னை—13' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
8. 1955-ஆம் ஆண்டு இறுதியிலிருந்து 1959-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ஆம் நாள்வரை சேர்த்தனுப்பப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் தங்கள் உறுப்பினர் உரிமையை மறு அறிக்கையில் குறிப்பிடும் காலம் வரையில் பெற்றவராவர்.
9. மார்ச் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 31-ஆம் நாள் வரை எந்தக் கிளையும் புதிதாக உறுப்பினர்களைச் சேர்த்தனுப்பும் பணியில் ஈடுபட வேண்டாம் என்று கிளைகளெல்லாம் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.
10. 1—4—59-ஆம் நாளிலிருந்து 30—6—59-ஆம் நாள் வரையில் புதுப்பிக்கப்பட்டும், புதிதாகச் சேர்க்கப்பட்டும் பதிவு செய்யப்படுகிற உறுப்பினர்கள், மறு அறிக்கையில் குறிப்பிடும் காலத்திலிருந்துதான் உறுப்பினர் உரிமையைப் பெற்றவராகக் கருதப்படுவர். உறுப்பினரைச் சேர்த்து அனுப்புவதில் தற்போது கிளைக் கழகங்களுக்கு ஏற்பட்டுள்ள அனுபவமும், உறுப்பினர்களைப் பதிவு செய்து அனுப்புவதில் தலைமைக் கழகத்திற்கு நேர்ந்துள்ள அனுபவமும் இந்தத் தடவை உறுப்பினர்ச் சேர்த்தலைச் சீரிய முறையிலும் விரைவாகவும் செய்து முடிக்கப் பெரிதும் பயன்படுவனவாகும் என்று நம்புகிறோம்.

'அறிவகம்', சென்னை—13.
28—2—1959.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர் தி. மு. க.

தேசியம் பிள்ளை...

[1—ம் பக்கம் தொடர்ச்சி]

அரசினருக்குச் சொல்ல முடியாத நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்தை ஈடு செய்ய வழி காணவேண்டும்.

ஒரு பிரதிநிதி:
"இனியும் உயிர்களை மேலும் மேலும் கொண்டு வராமல் இருந்தால் என்ன?"

எமன்: நல்ல கேள்விதான். ஆனால் கேள்வி கேட்கும் உறுப்பினர் பிரமச்சாரி மட்டுமல்ல; அவருக்குப் பூவுலகில் உற்றார் உறவு, அக்காள் தங்கை, அண்ணன் தம்பி யாருமே இல்லை. தாயும் தந்தையும் மட்டுந்தான். அவர்கள் முன்னமே இங்கு வந்து விட்டார்கள். ஆனால் மற்ற உறுப்பினர்கள் அப்படி அல்லவே! எங்கள் சொந்தக்காரர்களை எப்படியாவது அழைத்து வந்து விடுங்கள் என்று பலமான சிபார்சுகளுடன் விண்ணப்பம் போட்ட வண்ணமிருக்கிறார்களே!

இந்த நிலையில் நமது ராஜ்யத்துக்கு ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்க்க என்ன செய்யலாம்?

ஒரு குரல்:
"வரி போடலாம்!"

எமன்: யாரது? வரி போடுவதா? இதுவரையில் அப்படி ஒரு வார்த்தையை இந்தச் சபை கேட்டதே கிடையாதே. வரி! வரி!! வரி!!! புதுமையான வார்த்தை! இந்த வார்த்தையைச் சொன்னவர் யார்? எழுந்து நில்லுங்கள், பார்க்கலாம்.

[ஒரு பெரிய உருவம், கதராடையும் கதர்க் குல்லாயும் அணிந்து எழுந்து நிற்கிறது.]

எமன்: நீ யார்? இந்தச் சபைக்கு எப்படி வந்தாய்?

கதர் உருவம்: என் பெயர் **தேசியம் பிள்ளை!** மேலே பார்வையாளனாக வந்து உட்கார்ந்திருந்தேன். நீங்கள் நாட்டுப் பொருளாதாரம் செழிக்க வழி கேட்டதும் உணர்ச்சி வசப்பட்டு கீழே குதித்து விட்டேன். மன்னிக்கவும்.

எமன்: சபையின் கௌரவத்தையே குலைத்திருக்கிறாய்! அதுமட்டுமல்ல; என் உத்திரவில்லாமல்—எங்கள் நாட்டு அனுமதிச்சீட்டு பெறாமல் எமராஜ்யத்தில் அத்துமீறிப் பிரவேசித்திருக்கிறாய்! ஒருவேளை, நீ கள்ளத் தோணியிலேதான் வந்திருக்க வேண்டும். உன்னை சும்மா விடப் போவதில்லை. "வரி" என்ற வார்த்தைக்கு அர்த்தம் சொல்லித் தீரவேண்டும்.

தேசியம் பிள்ளை: பிரபு! நீங்கள் என்னைச் சாதாரணமாகக் கருதக்கூடாது — உங்களுக்கு எருமை வாகனமென்றால் எனக்குக் காளை மாட்டு வாகனம் — ஏறத்தாழ இருவரும் ஒரே மாதிரி! அதுமட்டுமல்ல; நான் பிறந்த வருஷம் 1885! இத்தனை ஆண்டுகளாக இங்கு வந்து தங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று எத்தனையோ முறை முயன்றேன்; முடியவில்லை. இதோ — அதோ—இன்றைக்கு நாளைக்கு என்று 'கெடு' கூட வைத்துவிடுவேன். திடீரெனக் கடைசி நேரத்தில் எப்படியோ பயணம் ரத்தாகிவிடும். நான் செய்த பாக்கியம், தங்கள் தரிசனம் கிடைத்தது. அய்யன்மீர்! என் சிறிய தந்தை மகாத்மா காந்தி இங்கே வந்தாராமே; அவர் இப்போது எங்கேயிருக்கிறார்?

எமன்: ஓகோ, நீ காந்திக்கு மகன் முறையா? அந்தக் காந்தி நம்மை அவமதித்துப் பேசிய காரணத்தால் 'சொர்க்கம்' என்னும் படுபாதாளச் சிறையில் போட்டுப் பூட்டி வைத்திருக்கிறேன். அவரை நீ இப்போது பார்க்க முடியாது! இதோ உன்னையும் கைது செய்து என் அரசாங்கப் பாதுகாப்புக் கைதியாக — மரியாதைகள் ஏதுவும் குறையாமல் என் மாளிகை விருந்து விடுதியில் தங்க வைக்கப் போகிறேன். நாளைய தினம் நமது பேட்டி. அப்போது 'வரி' என்ற வார்த்தையைப் பற்றி விவாதிப்போம். அதன் பிறகு உனக்குரிய தண்டனை வழங்கப்படும்.

தேசியம் பிள்ளை: தண்டனையா?

எமன்: ஆமாம் — நமது நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு பெரும்பான்மையோர் கருத்துப்படி தண்டனை வழங்கப்படும்.

தேசியம்பிள்ளை: ஓகோ, இங்கும் ஜனநாயக ஆட்சிதானா?

எமன்: கிட்டத்தட்ட உங்கள் நாட்டைப் போலத்தான், எல்லாம்!

உங்கள் நாட்டில் சபாநாயகர் குறித்த காலத்தில் வரவேண்டும். எங்கள் ராஜ்யத்தில் வந்தாலும் வரலாம்—வராவிட்டாலும் பரவாயில்லை. மற்றபடி எல்லாம் ஒரே மாதிரி ஜனநாயகந்தான்! உங்களிடமிருந்து நாங்கள் கற்றுக் கொள்ளாத ஒரே ஒரு விஷயம் "வரி" என்றாயே; அதுதான்!

தேசியம் பிள்ளை: அதையும் நாளைக்கு விளக்கி விடுகிறேன்.

எமன்: சந்தோஷம்! காவலர்களே! இந்த உயிர்ப் பிராணியைக் கைது செய்து நமது உல்லாச மண்டபத்தில் பாதுகாப்பில் வை!

தேசியம் பிள்ளை: உல்லாச மண்டபமா? அப்படியானால் உதகை மண்டலமா?

எமன்; அதே போலத்தான்! உங்கள் உதகைமண்டலத்தில் பனிக் காற்று வீசும்! இங்கே நறுமண மிக்க பிணக் காற்று வீசும்! அனுபவித்துப் பாரும்! இரண்டுக்குமுள்ள வித்தியாசம் தெரியும்—

ஏய்! அழைத்துப் போ! நாளைக்குச் சந்திக்கிறேன்!

[தேசீயம் பிள்ளை அழைத்துச் செல்லப்படுகிறார். சபாநாயகர் வருகிறார். சபை மறுநாள் காலை வரை ஒத்தி வைக்கப்படுகிறது.]

[தொடரும்]

தமிழறிஞரின் நன்கொடை

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ரா. பி. சேது (பிள்ளை) தம் அன்னை திருவாட்டி சொர்ணம்பாள் அவர்களின் நினைவாக சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் தனித் தனியே ரூபாய் 25,000 நன்கொடையளித்துள்ளார். கொடை கொடுக்கும் தமிழ் உள்ளம் வாழ்க!

"சரித்திரம் திரும்பத் திரும்ப நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்ற மொழி பொய்மொழியல்ல; பொன்மொழி!

அன்ெருருநாள் தமிழகத்துப் பாராளுமன்ற உறுப்பினர்—கொங்கு நாட்டவர் — வணிகர் திரு. டி. ஏ. இராமலிங்கம் (செட்டியார்) டில்லிப் பாராளுமன்றத்தில் அவமதிக்கப்பட்டார்! இன்றுகூட தமிழகத்துப் பாராளுமன்ற உறுப்பினர் — கொங்கு நாட்டவர் — இன்னும் சொல்லப்போனல் டி. ஏ. இராமலிங்கம் (செட்டியாரின்) உறவினர் டி. எஸ். அவினசிலிங்கம் (செட்டியார்) டில்லி

அதே வட்ட வடிவப் பாராளுமன்றத்தில் தென்னகத்தின் கதர் சொக்காய்க்காரர்கள் இப்போது மீண்டும் குட்டப்பட்டனர்!

முன்பொரு தடவை கல்வி அமைச்சராகப் பணியாற்றிய டி. எஸ். அவினசிலிங்கம் (செட்டியார்) பாராளுமன்றத்தில் பேசும் போதுதான் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

உணவுப் பிரச்னையைப்பற்றி திரு. அவினசியார் பேசும்போது நாட்டின் உணவுநிலை அவலம் பற்றி வேதனையுடன் குறிப்பிட்டார். சிறிது கடுமை நிறைந்த வார்த்தைகளாலே தன் அதிருப்

இந்தி வெறியருக்கு ஓங்குகிறது கை!
அவினசியாருக்கு விழுகிறது குட்டு!

ஏகாதிபத்யப் பாராளுமன்றத்தில் அவமதிக்கப்பட்டார்.

இந்தி மொழியின் 'அநியாயத் திணிப்பை' அந்தக் காலத்திலேயே மோகனராகத்தில் எதிர்த்து முழக்கினவர், டி. ஏ. ராமலிங்கம் அவர்கள்! அவருடைய அடக்கமும், துடிப்பும் நிறைந்த அந்தப் பேச்சைக் கேட்டு வடக்குப் புரியினர் **மௌனம்** சாதித்தனர்; கடைசியில் ஓட்டெடுப்பில் இந்தியைத் திணிக்க வேண்டுமென்னும் தங்கள் வஞ்சக எண்ணத்தையும் சாதித்துக் கொண்டனர்.

அப்போது பேசிய திரு. டி. ஏ. ராமலிங்கம், டில்லி-இந்தியாவின் தலைநகராக இருக்கக்கூடாது என்ற ஒரு கருத்தை அந்த 'இந்துஸ்தானத்து நவாப்புகளின்' முன்னிலையில் வைத்தார்!

"இந்தியத் துணைக்கண்டத்திற்கு டில்லி தலைநகராக இருப்பது சரியல்ல — தென்னாட்டிற்கும் தலைநகருக்கும் மிகமிகத் தொலைவு இருக்கிறது—டில்லியின் தட்ப வெப்ப நிலையும் மோசம் — எனவே, நாட்டின் நடுப்பகுதியில் இருக்கும் வேறு ஏதாவது ஒரு நகரத்தைத் தலைநகராக்கலாம்.

"மேலும், தென்னிந்தியர்கள் தமது இடத்திற்கு டில்லி மிகமிகத் தொலைவிலே இருப்பதை விரும்பமுடியாது. தென்னிந்தியர்களை பஞ்சாபிகள் வென்றுவிட்டார்கள் என்று எண்ணவும் செய்கிறது"—என்று பேசினாராம்.

உடனே பாராளுமன்றத்திலுள்ளவர்கள் **சிரித்தார்களாம்!**

"சிரிக்கக் கூடிய விஷயமல்ல இது, நண்பர்களே!"—என்று ராமலிங்கனார் கூறிவிட்டு, வடநாட்டின் வெறிநாய் எண்ணத்தைப் பற்றி மேலும் சில கூறினார்!

"கேளுங்கள், நண்பர்களே! இங்குள்ள (வடநாட்டிலுள்ள) பத்திரிகைகள் சில நாட்களுக்கு முன்பு மதராசிகளை முதலில் **கவனித்துவிட்டு,** பிறகு மராட்டியர்களைக் கவனிக்க வேண்டும்! மதராசிகளை மதராசுக்குத் துரத்த வேண்டும் என்றெல்லாம் எழுதின!"—என்று கூறினார்.

பார்லிமெண்டில் கூடியிருந்தவர்கள் **எல்லோரும் மீண்டும் சிரித்தார்கள்!**

மத்திய ஆட்சியின் வலிமை தெரியாது, தான் இருக்கும் அடிமை நிலைமையை அறியாது பிதற்றுகின்ற இவரைப் பார்த்து அவர்கள் சிரித்து அவமானப்படுத்தாமல் என்ன செய்வார்கள்?

ஆளவந்தார்களின் சட்டையையும், தொப்பியையும் போட்டுக் கொண்டதால் மட்டுமே, அடிமை பூமியில் அவர் பிறந்திருந்தும் அந்த ஆதிபத்திய அத்தாணி மண்டபத்திலே உட்கார வைத்திருக்கிறார்கள் என்பதை உணராது பேசினர்! எந்தக் கேடு காலம் வந்தாலும் சிறு விரலையும் அசைக்க முடியாத அளவிற்கு, அரசியல் ஜீவநாடிகளை டில்லிக்குத் தத்தம் செய்துவிட்ட தக்காணத்தின் பிரதிநிதி என்பதை அவர் அறியாமல் பேசினர்.

கிடைத்தது, சிரிப்பு; அடைந்தது அவமானம்!

இது நடந்தது, 1948, மார்ச் மாதம்!

தியைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த இழிநிலைக்குக் காரணமாயும், முதல்வராயும் இருப்பவர்கள் மாற்றப்பட்டு, 'சக்திவாய்ந்தவர்கள்' அந்தப் பதவிகளில் அமர வேண்டும் என்று கனிவு நிறைந்த தன் எதிர்ப்பை நேருபிரானுக்குத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அமர்ந்திருந்தவர்கள் இந்தப் பேச்சை **மௌனத்துடன்** ரசித்தனர். நேருபிரானின் நெஞ்சை நோக்கி வீசப்பட்ட இந்த மலர்க்கணையை அவர்கள் தடுக்க முற்படவில்லை; வீசியவரை நோக்கித் கடுத்துக் கூறவும் இல்லை!

ஆனால், திரு அவினசியார் இந்திப் பிரச்சினையைப்பற்றிப் பேசியதும் அந்த 'சாம்ராஜ்யங்களின் சுடுகாட்டுமேட்டிலே' அமைந்திருக்கும் சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

'கனம் அங்கத்தினர்கள்' கடும் எதிர்ப்பைத் தங்கள் அதிருப்திக் குரலின் மூலம் தெரிவித்துக் கொண்டார்கள்.

அவினசியாரின் பேச்சு இடைமறிக்கப்பட்டது, அவர் சார்ந்திருக்கும் இந்திய தேசிய மகா சபை அங்கத்தினர்களால்!

அப்படியென்ன, அவினசியார் இந்தியை மந்தி என்று வர்ணித்தாரா?

'ஓடிவந்த இந்தி அரக்கியே கேள்! நீ நாடி வந்த நாடு தென்னகம் அல்லவே' என்று எச்சரிக்கை பாணம் தொடுத்தாரா?

"எப்பக்கம் நுழைந்துவிடும் இந்தி; எத்தனை பட்டாளம் கூட்டி வரும்?" என்று போர் முரசு தட்டினாரா?

"இந்தி நஞ்சை நுழைந்திடும் வஞ்ச நெஞ்சினருக்கு எங்கள் வாள்முனை பதில் கூறும்"—என்று வாளை உருவிக் கொண்டு கூறினாரா?

—இல்லை; இல்லை! — அவினசியார் அவ்வளவு காலத்தோடு ஒட்டிச் செல்பவரல்ல!

இந்தியை நுழைக்கிறதே நுழைக்கிறீர்கள்! அவசரப்பட்டு, எட்டுநாள் பட்டினி கிடந்தவன் லட்டுக் கடைக்குள் புகுந்து தின்பதுபோல் ஆத்திரத்துடன் நுழைக்காதீர்கள். **திணிப்பதில் கொஞ்சம் நிதானம் காட்டுங்கள்**—என்றுதான் அவர் டில்லி மூலவர்களின்

[தொடர்ச்சி பக்கம்—8]

இலக்கியத் தேனருவி!
ஈடற்ற அறிவுப் புதையல்!

"முத்தாரம்"

முற்றிலும் புதிய பொலிவுடன்
தயாராகிறது இதழ் 24!

● காதற் கடலில் விழ நினைப்போருக்கும் விழுந்து தத்தளிப்போருக்கும் சுவையான சேதி தரும் கையகராதி...

இளங்காதலருக்கு மட்டுமே..!

● உங்களுக்குப் பக்கத்திலேயே இருப்பவர்களது உண்மையான பண்பு எத்தகையது என்பதை அறிவீர்களா? இந்தச் சங்கடமான ஆராய்ச்சிக்கு விடை....

குணங்களை அளக்கும் கலை!

● நாடு சிறுத்தால் நல்ல வாழ்வு கெடும்—என்கிற பிரிவினை எதிரிகளுக்கு நகரே நாடாகிய அதிசயத்தை விளக்குகிறது!

கீரைப்பாத்தி நாடு

● தமிழ் வளர்த்த தாய்மார்கள், தமிழ் காக்கத் துடிக்கின்ற நம் நன்றிக்குரியவர்கள் — அப்படி முதுகுடிப் பிறந்த மூதாட்டிகளின் புலமையைச் சொல்கிறது, எம். சுந்தரம் எம். ஏ. எல். டி., பி. ஓ. எல். எழுதிய

**படியாத பெண்களின்
பண்பட்ட இலக்கியம்!**

இன்னும்

சிந்தனையைத் தடவும் சிறுகதைகள்!
செந்தமிழ் மணக்கும் கட்டுரைகள்!
செந்தேன் நிகர்க்கும் கவிதைகள்!

★

மாறன் எம். ஏ. எழுதும்
சிறுகதையுடன்
மார்ச் 7-ம் நாள் கிடைக்கும்!



செம்பனார்கோவில் பொதுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா —உடனிருப்பவர் மாலையணிவித்த விளக்கர் கணேசன்.

மகிழ்ச்சி மடல்

~ கருணானந்தம் ~

அன்பார்ந்த நண்பா!

நெடுநாட்களாகவே உனக்கு மடல் தீட்டவேண்டுமென எண்ணியிருந்தேன். அதற்கான ஓய்வும், வாய்ப்பும் சரிவரக் கிடைக்கவில்லை. இடைநேரத்தில் உனது முடங்கலும் வரப்பெற்றேன். எனவே, இனியும் தாமதிக்கக் கூடாதென்று இப்போது எழுதத் துணிந்தேன்.

"திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்திருக்கிறது" என்று கழகத்தைச் சார்ந்தவர்கள் மேடைதோறும் முழங்குகின்றார்களே, அது எவ்விதம்?" என்று நீ உன் கடிதத்தில் கேட்டுள்ளாய். கடந்த இரு கிழமைகளில் நான் நேரில் காண வாய்ப்புப் பெற்ற இரண்டொரு நிகழ்ச்சிகள்பற்றி விவரிக்கிறேன். அவற்றைக் கொண்டு 'திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்திருக்கிறதா; அல்லது மாற்றார் கருதுவதுபோல் வளர்ந்திருப்பதாகக் கூறிக் கழகத் தோழர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்களா என்பதை நீயே முடிவு செய்து கொள்!

கடந்த 15—2—59 — அன்று குடந்தையில் தி. மு. க. நிதிக்காக ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இயக்கத்தின் பழம் பெரும் தொண்டரும், கடந்த 30 ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டும் இன்றுவரை ஒரு இளைஞருக்குள்ள ஆர்வம் குன்றாதவரும், முன்னணிச் செயல் வீருமான கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் தோழர் மு. க. அவர்களும், தம்பி மாறனும் சொற்பொழிவாற்றினார்கள். கால் ரூபாய்க் கட்டணம் செலுத்தி அந்த மன்றத்தில் நிரம்பி வழிந்த மக்கள் வெள்ளம் உச்சி வெய்யிலின் உக்கிரத்தைப் பொருட்படுத்தாமல் பேச்சைக் கேட்டனர் — நண்பா! பேச்சைத்தான் கேட்டனர் — இசைக் கச்சேரியோ, நடன நிகழ்ச்சியோ, நாடகமோ அல்ல.

தம்பி மாறன் பேசும்போது ஒன்றி குறிப்பிட்டார்: உலகத்திலேயே வேறெந்த நாட்டிலும், வேறெந்தக் கட்சியிலும் நிகழ்த்த முடியாத அற்புதம் . திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் நடைபெறுகிறது. கட்டணம் செலுத்திவிட்டுப் பேச்சைக் கேட்கும் முறை எங்கணுமே இல்லாத புதுமை. இதற்குமுன் அமெரிக்காவில் இங்கர்சாலின் சொற்பொழிவுகளைத்தான் மக்கள் காசு கொடுத்துக் கேட்டதுண்டு. அவர்கூட அதற்காக ஆறுமாதம் அறைக்குள்ளிருந்து, படித்து, தயாரித்துக் கொண்டு, அடுத்த ஆறு மாதத்தில் சூறாவளிச் சுற்றுப்பிரயாணம் செய்து சொற்பொழிவாற்றிப் பொருளீட்டுவார். ஆனால் நம்மைப்போல் இப்படி நாள்தோறும் மக்களிடையே பழகுகிற தோழர்களின் கூட்டங்களுக்கு மக்கள் காசு கொடுத்துச் செல்லுவது விந்தையன்றோ? இம்மாதிரியான சிறப்புக் கூட்டங்கள் இன்று பெரிய நகரங்களில் மட்டுமல்லாது, சிற்றூர்களிலும் பரவிச் சீரிய முறையில் நடைபெற்று வருகின்றன.

அதே சிறப்புக் கூட்டத்தில் தோழர் மு. க. அவர்கள் பேசும் போது மக்கள் ரசித்த காட்சியை நீ நேராகக் கண்டிருந்தால்தான் உணர முடியும். அவர் பேசிய ஒவ்வொரு , வாக்கியத்துக்கும் கையொலி எழுப்பி ஆரவாரம் செய்து மக்கள் உணர்ச்சி மயமாகியிருந்தனர். இதே மக்களை, நமது நாவின் வலிமையினால் நாளை நடைபெறப் போகும் போராட்டங்களில் ஈடுபடுத்துவது கடினமென்று எண்ணுகின்றாயா? யோசித்துப் பார்!

அன்று மாலை 40 கல் தொலைவுக்கு அப்பாலுள்ள தரங்கம்பாடிக்கு அருகிலுள்ள சந்திரப்பாடி என்னும் சிற்றூரில் பொதுக்கூட்டம்! கடற்கரையோரத்திலுள்ள கிராமமாகிய சந்திரப்பாடியில் சுமார் 400 வீடுகள் இருக்குமாம். அந்தக் கிராமவாசிகள் வீட்டுக்கு ஒரு ரூபாய் வீதம் வசூலித்துப் பொதுக்கூட்டத்தை நடத்தினர், கிராமத்தில் முன்பெல்லாம் நடைபெறும் திருவிழாபோல்! இப்போது மக்களுக்கு ஆர்வம் தருவது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டங்கள்தான். ஊர் முழுவதும், செல்லும் சாலை முழுதும் தோரணங்கள், காகிதக் கொடிகள், வளைவுகள், வண்ண விளக்குகள்! ஆனால் சந்திரபாடிக்குச் செல்லும் கிளைப் பாதையின் நிலையோ பயங்கரமாயிருக்கிறது. மிருதுவான மண் பாட்டை— எதிரே வண்டி வருகிறதே என ஒதுங்கினால் சரிந்து கீழே விழ வேண்டியதுதான. அதைத் தாண்டி அப்பால் செல்லுகிறோம். பழங்காலத்துப் போர்க்களத்தில் குதிரைப் படை அணிவகுத்து நிற்கும் காட்சியினை நினைவூட்டுவதுபோல் சைக்கிள் வரிசைகள், கொடிகளுடன். கூட்டம் முடிந்து ஊருக்குள் செல்லுகிறோம் — உணவருந்தத்தான்! வீடுகளெல்லாம் பூட்டிக் கிடக்கின்றன. ஏனென்று விசாரித்தோம். ஊர் மக்கள் யாவருமே கூட்டத்துக்கு வந்து விட்டனராம். பொதுக் கூட்ட மைதானத்தில் தற்காலிகமாகத் . தேநீர், பட்டாணி, பலூன், ரிப்பன் கடைகள் வேறு. ஒரே கோலாகலக் காட்சி அல்லவா, நண்பா?

சென்ற 23—2—59 அன்று பட்டப் பகல் 12 மணிக்குச் சிதம்பரம் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழர் திருநாள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். 1—30 மணிக்கு நிகழ்ச்சி முடிந்தது. பகல் உணவுக்குப் பின் ஏறத்தாழ ஒரு மணி நேரம் மாணவர்கள் விரும்பிய வண்ணம் அவர்களுடன் நிழற்படம் பிடித்துக் கொண்டார்கள். இந்த மாணவர்கள் யார் தெரியுமா? 21—2—59 அன்று இரவு "ஹோம் லாண்ட்" பத்திரிகை வளர்ச்சிக்காக அறிஞர் அண்ணா அவர்களிடம் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை திரட்டித் தந்தவர்கள். பத்தாயிரம் ரூபாய் சேகரித்தளித்ததோ, மாணவர்கள்! திகைப்பில்லையா நண்பா?

1944-ல் முதலாவது திராவிட மாணவர் மாநாட்டைக் குடந்தையில் நாங்கள் கூட்டியபோது இரண்டுநாள் நிகழ்ச்சிக்கும் எங்களுக்கு வசூலான தொகை நானூறு ரூபாய். 15 ஆண்டு கால வளர்ச்சியில் அதே மாணவர்கள் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை திரட்டமுடிகிறது என்றால் இதைப்பற்றி நீ என்ன கருதுகிறாய்? இவ்வளவுக்கும், காங்கிரஸ்காரர்களைப்போல் மாணவர்களை அரசியலில் ஈடுபடுத்தி அவர்கள் படிப்பைப் பாழ் செய்பவர்களல்ல, நமது தலைவர்கள். அந்த நிலை மாணவர்களுக்குப் பிடித்தமானதாயிருக்கும் என்றாலும், அதைக்கூறாமல் மாணவர்களிடையே கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் வளர்ப்பதன்றோ, நமது கழகம்? மாணவர் பட்டாளம் நம் பின் அணிவகுத்துள்ளது கண்டு வயிறெரிகின்ற மாற்றாகள் என்னென்ன செய்கிறார்கள் தெரியுமா?.......

காத்திருப்பு, ஆறுபாதி என்ற சிற்றூர்களின் ஊராட்சி மன்ற வரவேற்புகளில் கலந்து கொண்டு, மாலை செம்பனார் கோயில் பொதுக் கூட்டத்தில் அண்ணா உரையாற்றினார். காத்திருப்பு என்னும் சிற்றூரில் கழகம் தோன்றி ஒரே ஒரு கிழமை தான் ஆகிறதாம். அங்கே மாலை 4 மணிக்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஏராளமான உழவர் பெரு மக்கள் திரண்டிருந்தனர்.

மாலை 4 மணிக்குப் பொதுக் கூட்டம், நண்பா! அதற்கு முதல் நாள் வெய்யலூர் என்ற சிற்றூரில் அண்ணா பேசும்போது நள்ளிரவாம். இப்படியாக, நள்ளிரவோ, நண்பகலோ, மாலையோ, முன்னிரவோ நமது கூட்டங்களுக்கு மக்கள் திரள்கின்றனர். கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின் உருவாகியுள்ள சூழ்நிலை வியக்கத்தக்க முறையிலிருக்கிறது. ஊராட்சி மன்றங்களில் பெருமளவில் நமது கழகத் தோழர்கள் பொறுப்பேற்றுள்ளனர். அவர்களிலும் இளைஞர்களே ஏராளம். கடமையுணர்ச்சியால் உந்தப்பட்ட இவ்விளைஞர்களின்



25—2—59 அன்று ஆலத்தம்பாடியில் மு. க. பேசிய கூட்டத்தின் மேடையின் தோற்றம்—ஒ. ஏ. டி. கே. பாலு தலைமையில், அம்பில் தருமு பேசிக்கொண்டிருக்கிறார்.

கையில்தானே நாட்டின் எதிர் காலம்? இதற்கு மட்டும்தான் இளைஞர்கள் முன் வந்திருக்கிறார்கள் என்பதல்ல.

இரு திங்களுக்கு முன் எஸ். எம். டி. பஸ் மறியல் போராட்டமொன்று தஞ்சையில் நடைபெற்றதும், தோழர் மு. க. அவர்கள் போராட்டத்தில் நேரடியாக இறங்க முடிவு செய்ததும், பின் அப்போராட்டம் வெற்றிகரமாக முடிவுற்றதும் அறிவாயல்லவா? அதற்காக மாயூரம் வட்டத்தில் மாத்திரம் மறியல் செய்து சிறை சென்ற தோழர்கள் 82 பேர். இவர்கள் விடுதலை பெற்று மீண்டபோது நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் மு. க. அவர்கள் பாராட்டுப் பத்திரங்கள் வழங்க, அவற்றைப் பெற்றுக்கொண்ட 82 தோழர்களையும் நீ கண்ணாரக் கண்டிருக்க வேண்டும். ஒருவர்கூட இருபத்தைந்து வயதுக்கு மேற்படாதவர் என்றால், கழகத்தைக் கட்டிக்காக்க, எத்தகைய தியாகத்துக்கும் தயாராயுள்ள இந்த இளைஞர் படையைப் பற்றி என்ன எண்ணுகிறாய்?

செம்பனார்கோயிலில் நடைபெற்ற கூட்டம் அந்த ஊரின் வரலாற்றிலேயே யாரும் அதற்கு முன்னால் கண்டதில்லையாம். மேடை அலங்காரம் என்ன சிறப்பு! ஊரெல்லாம் எவ்வளவு வரவேற்பு வளைவுகள்! அவற்றில் பொறித்திருக்கும் இலட்சியச் சொற்களில் மணக்கும் செந்தமிழின் மேன்மைதான் என்னே!

நண்பா, அண்மைக் காலங்களில் நமது தோழர்கள் பொதுக் கூட்டம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதில் எவ்வளவு கைவிரப் பெற்றுள்ளனர் என்பது எண்ணி யெண்ணி வியக்கத் தக்கதாம். ஒவ்வொருவரும் தத்தம் திருமண விழாவுக்குப் பாடுபடுவதுபோல் ஊண் உறக்கமின்றி உழைக்கின்ற பாங்கும், உற்சாகம் குன்றாமல் பணி புரியும் விதமும் கண்டுதான் மகிழ வேண்டும். இவ்வளவு சிரமப்பட்டு கூட்டத்தைச் சேர்த்துக் கண்ட பலன் என்ன? மக்கள் பேச்சை ரசித்து விட்டுச் செல்கிறார்களே தவிர, அவர்கள் வாக்காளராக மாறும் போது நம்மை மறந்து விடுகிறார்களே என நினைப்பாய். இன்றைய நிலை அதுவாயிருப்பினும், வருங்காலத்தில்மக்கள் உண்மையான தொண்டர்கள் நாமே எனத் தீர்மானித்துவிட்டால் அவர்களை பண பலமோ, படை பலமோ, பிரச்சார பலமோ ஒன்றும் செய்ய இயலாதென்ற நம்பிக்கையும் நமக்கு வளர்ந்து வருகிறது.

ஆலத்தம்பாடி என்ற சிற்றூரில் — நாமெல்லாம் திராவிடர் கழகமாக இருந்தபோது மு. க. அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசினார்களாம். ஏறத்தாழ இருபது முப்பது பேர் கூடி இருந்தார்களாம்.

அதே சிற்றூரில் அதே மு. க. அவர்கள் சென்ற 25—2—59 அன்றும் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார்கள். அப்போது பிழையங்குடி ஊராட்சி மன்றத்தின் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டது. மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் மலையெனக் குவிந்தன. தாழ்த்தப்பட்ட தோழர்களும் பிறரும் பல்லாயிரக் கணக்கில் திரண்டனர். சைக்கிள் எண்ணிக்கை நானூறுக்கும் குறைவில்லை. இவ்வளவுக்கும் அந்தக் கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது நான்கே நாட்களுக்கு முன்புதான்!

இவ்வாறாக நமது தோழர்கள் —கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற முப்பெரும் இலட்சியச் சொற்களை நெஞ்சிலே ஏந்தி, எள்ளளவும் வழுவாது, ஏச்சுக்கும் பேச்சுக்கும் பணியாது, நாட்டை மீட்கும் அரும் பணியில் அல்லும் பகலும் அயராது உழைக்கின்றனர்.

இதெல்லாம் நமது விடுதலை நாள் நம்மை நெருங்கி அதி விரைவில் வந்து கொண்டிருக்கிறது என்பதன் அறிகுறி யல்லவா நண்பா? நேரமாகிவிட்டது; பிறகு சந்திக்கிறேன்.

அன்புள்ள,

நண்பன்.



23—2—59 அன்று செம்பனார்கோவிலில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசிய கூட்டத்தின் மேடை இது — அண்ணாவுடன் தோழர்கள் ஏன். எஸ். இளங்கோ, தில்லைவில்லாளன் எம். ஏ., பி. எல். ஆகியோரைக் காணலாம்.

சத்தான தமிழிலே முத்தான கருத்துக்கள்!
கலைஞர் மு. கருணாநிதியின்
சொல்லோவியம்
விலை 1-25
ரத்தின பதிப்பகம்,
தெப்பக்குளம் — திருச்சி

மனிதனின் கதை...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் (**Theology**) இதில் இல்லை. தன்னை ஒரு அவதார புருஷராக எண்ணி மக்கள் வழிபாடு செய்யக்கூடாது என்பதில் முகம்மது கண்ணும் கருத்துமாக இருந்தார். கடவுளின் பார்வையில் மனிதர் அனைவரும் சமம் என்பதையும், அவர்களிடையே சகோதரத்வம் நிலவ வேண்டிய அவசியத்தையும் இஸ்லாம் மனித தர்மத்தின் அடிப்படையாகக் கொள்கிறது. விபச்சாரம், வட்டி வாங்குதல், சூதாடுதல், மது அருந்துதல் ஆகியவற்றை இஸ்லாம் வன்மையாகக் கண்டித்துத் தடை செய்கிறது. முகம்மதுவால் சொல்லப்பட்ட கோட்பாடுகள் அடங்கிய நூலுக்குக் 'குரான்' என்று பெயர். இந்தக் குரானே இஸ்லாமியர்களின் வேத நூலாகும்.

முகம்மதுவால் தோற்றுவிக்கப்பட்ட இஸ்லாமிய மார்க்கம் ஆத்மீகத் துறையில் மட்டுமல்ல; அரசியல் துறையிலேயும் உலக வரலாற்றில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. பல்வேறு பிணக்குகளால் மிகவும்வேறுபட்டிருந்த அராபியர்களை இஸ்லாமிய மார்க்கம் ஒன்று படுத்தியது. முகம்மதுவின் மூலமாக ஆண்டவன் இட்ட கட்டளைப்படி, சிலைவழிபாட்டை ஒழித்து, ஒரே கடவுட் கொள்கையின் கீழ் உலகைக் கொண்டுவர அராபியர்கள் போர்க்கோலம் பூண்டு புறப்பட்டனர். மத வெறியாலும், முகம்மது ஊட்டிய புத்துணர்வாலும் அவர்கள் பெற்றிருந்த சக்தி மாபெரும் சாம்ராஜ்யங்களையெல்லாம் அவர்களுடைய காலடியில் மண்டியிட்டுப் பணியச் செய்தது.

முகம்மது வாழ்ந்த காலத்திலேயே பல்வேறு மன்னர்களுக்கும் ஆண்டவனின் கட்டளையை எழுதியனுப்பி அடிபணியச் சொன்னார். முகம்மதுவின் மரணத்துக்குப்பின் அவருடைய நெருங்கிய நண்பரான அபூபக்கர் இஸ்லாமிய நெறியின் கீழ் அராபியர்களை ஒன்று படுத்தும் பணியில் ஈடுபட்டார். சிரியா, டெமாஸ்கஸ், ஜெருசலேம் போன்ற நாடுகளையெல்லாம் வென்று மேற்கில் பேரரசனாக விளங்கிய ஹிராகிலியஸ் (**Heraclius**) அராபியர்களின் பலத்துக்குமுன் தலை வணங்கினான். பாரசீக சாம்ராஜ்யத்தைத் தோற்கடித்த அவனது பராக்கிரமம் இஸ்லாமியர்களுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. பல்லாயிரக் கணக்கான மக்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவினர்.

மேற்கே வெற்றி முரசம் கொட்டிய அராபியர்கள் கிழக்கேயும்— பாரசீக சாம்ராஜ்யத்தின்மீதும் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். ரஸ்டம் என்ற பிரபல பாரசீகத் தளபதியைப் போரில் வென்றனர். பாரசீகம், துருக்கி, எகிப்து—எல்லாம் இஸ்லாமியமயமாயிற்று. ஐரோப்பாவையும் விட்டுவிட இஸ்லாமியர்களுக்கு மனமில்லை. ஸ்பெயின்மீது படையெடுத்தனர். இது கி. பி. 710-ல் நடந்தது.

ஸ்பெயின் இஸ்லாமிய நாடாயிற்று. பிரான்சில் உள்ள டூர்ஸ் (**Tours**) நகரம் என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் சார்லஸ் மார்டெல் (**Charles Martel**) இஸ்லாமியர்களைத் தோற்கடித்திருக்காவிட்டால் ஐரோப்பிய வரலாறே புதுத் திருப்பம் பெற்றிருக்கும்!

முகம்மது இறந்தபின் முதல் காலிஃபாவாக அபூபக்கர் இஸ்லாமிய அராபியர்களின் தலைவரானார். அதற்குப் பின் காலிஃபாக்களாக (**Caliphs**) வந்தவர்கள், ஒழுக்க சீலர்களாக விளங்கி வழி காட்டாமல், தாங்கள் வென்ற மன்னர்களின் தீய ஒழுக்கங்களை யெல்லாம் மேற்கொண்டனர். இதனால் அராபியர்கள் நாளடைவில் பலம் குன்றி, பாடுபட்டுக் கட்டிய சாம்ராஜ்யத்தைப் படிப்படியாகக் கைநழுவ விட்டனர்.

ஒரு காலத்தில் அலக்சாண்டர் நிறுவிய சாம்ராஜ்யம் அரேபியர் வசப்பட்டதால், கிரேக்கக் கலாச்சாரத்தோடு நெருங்கியதொடர்பு கொண்ட ரோமானியக் கலாச்சாரத்தோடும் அவர்களுக்குப் பழக்கம் ஏற்பட்டது. அதன் விளைவாகக் கிரேக்கர்களின் ரசாயனம், வானாராய்ச்சி, பூகோளம், மருத்துவம், கணிதம் ஆகியவற்றை அராபியர்கள் அறிந்து கொண்டனர். சீனர்களிடமிருந்து பேப்பர் செய்யும் தொழிலையும் அறிந்து கொண்டனர். பாக்தாத், கைரோ, கோர்டோபா (ஸ்பெய்ன்) ஆகிய நகரங்களில் பெரிய இஸ்லாமியப் பல்கலைக் கழகங்கள் ஏற்பட்டன. இந்தப் பல்கலைக் கழகங்களில் தான் இஸ்லாமிய கணிதப் பேராசிரியர்கள் சிலர், கணிதத் துறைக்கே புது வழியான ஆல்ஜிப்ரா (**Algebra**) கணித முறையை வகுத்துக் கொடுத்தனர். இரசாயனம், மருத்துவம் ஆகிய துறைகளிலும், இப் பல்கலைக் கழகங்கள் பெருந் தொண்டாற்றின. அறுவை சிகிச்சை செய்ய மயக்க மருந்தை (**Anaes-thetics**) முதன் முதல் உபயோகித்தவர்கள் அராபிய முஸ்லிம்களே!

முகம்மது நபி ஆரம்பித்த சகாப்தம், எல்லாத் துறைகளிலும் ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தது. கிறிஸ்துவுக்குப்பின் ஆசியா தோற்றுவித்த ஒப்பற்ற பெரியார், நபிநாயகம்!

டூர்ஸ் போருக்குப்பின், இஸ்லாமிய ஆட்சிக்கு ஏற்பட்ட நிலை பற்றி என் அடுத்த கடிதத்தில் விவரிப்பேன்.

அன்புள்ள,

அகத்தியன்.

செங்கோட்டையில் சம்பத்!

தென்னகம் புறக்கணிக்கப் படுகிறது என்று நாம் வேதனையோடு குறிப்பிட்ட போதெல்லாம், கேலிக்கணை வீசி வந்தோரும், கேளாக் காதினராய் இருந்து வந்தோரும் அதிர்ச்சியுடனும், அக்கரையுடனும் கவனிக்கும் அளவிற்கு டில்லிப் பாராளுமன்றத்திலே தோழர் ஈ. வி. கே. சம்பத் உருவில் நம் குரல் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. அந்தக் குரலிலே உள்ள அழுத்தமும் ஆழமும் 'தென்னகம் புறக்கணிக்கப்படுகிறது' — என ஒரு 'தேசிய ஏடே' எழுதும் அளவிற்கு இட்டுச் சென்றதென்பதை நினைக்கும்போது, நம் உள்ளம் மகிழ்ச்சியால் விரிகிறது. பாரத் வர்ஷத்தாரும், பாராளுமன்றத்தாரும் உன்னிப்பாகக் கேட்ட அந்தத் 'தென்னகத்தின் குரல்' வருமாறு:

"முன்பிருந்து, எடுக்கப்பட்டு விட்ட சேலம் — பெங்களூர் இரயில் பாதையைத் திரும்பவும் போட வேண்டும் என்ற குரல் இதுவரை செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்து வருவதை இந்தச் சபை நன்கு அறியும். மூன்று நாட்களுக்கு முன்பாக சேலத்தைச் சேர்ந்த நமது இரயில்வே இலாகா துணை அமைச்சர், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது இந்தப் பிரச்சினை தீவிரப் பரிசிலனையிலிருப்பதாகக் கூறினர்.

"இதுபற்றி எங்களுக்குத் தலையும் தெரியவில்லை வாலும் தெரியவில்லை. ஏனெனில், 'தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது'—'தீவிர பரிசிலனையிலிருக்கிறது'—என்ற சொற்றொடர்கள் எல்லாம், 'இவற்றை நாங்கள் செய்யப்போவதில்லை' என்று அர்த்தமுடைய தேன் தடவிய சொற்றொடர்கள் என்பதுதான் எங்களது அனுபவமாயிருந்து வருகிறது.

"ஏனெனில் மைசூர் வர்த்தகக் கழகத்தாரிடையே பெங்களூரில் பேசும்போது மதிப்பிற்குரிய இரயில்வே அமைச்சர், 'மங்களூர் — ஹாசன் இரயில் பாதைத் திட்டம் பற்றி பரிசிலிக்கப்படவில்லை' என்று கூறினர். இப்படிக் கூறிய ஒரு திங்களுக்குள், வரவு-செலவுத் திட்ட உரையில், 'அது தீவிரமாகப் பரிசிலிக்கப்படுகிறது' என்று இங்கு—சபையில் கூறினர்.

"இத்தகைய சாகசமான வார்த்தைகளால், இவர் மனதில் என்னதான் இருக்கிறது என்பது புரியவில்லை. ஏற்கனவே மிகப் புறக்கணிக்கப்பட்டுள்ள தென்னாட்டின் முன்னேற்றம்—வளர்ச்சி பற்றி சிறிதேனும் கவலைப்படாமல் பழிவாங்கும் மனோபாவத்துடன் இரயில்வே அமைச்சர் பிடிவாதமாக மறுத்து வருகிறார் என்பது தென்னவரான எங்களது அனுபவம்.

"நெடுங்காலத்திற்கு முன்பே 'சர்வே' நடத்தப்பட்ட இந்தத் திட்டங்கள் எல்லாம் அப்படியே தூங்கிக் கிடக்கையில், சேலத்திலிருந்து திருச்சிக்கு இராசிபுரம்—நாமக்கல்—முசிறி வழியாகவும், கரூரிலிருந்து திண்டுக்கல்லுக்கும் பாதைகள் அமைக்கவேண்டும் என்ற நெடுநாளைய — நியாயமான திட்டங்களின் அவசியத்தை அமைச்சருக்கு உணர்த்த எனக்கு வார்த்தைகளே அகப்படவில்லை.

"ஏற்கனவே சீராட்டப்பெற்று வரும் வடநாட்டையே மேலும் வளர்க்கவும், செழிப்பாக்கவும் வேண்டும் என அதிகாரம் வகிப்போர் கொண்டுள்ள பேராசையும், தென்னாட்டை வஞ்சிக்கும் சர்க்காரின் கொள்கையும் எனக்கு நன்றாகத் தெரிந்துதான் இருக்கிறது; என்றாலும், தென்னகத்தின் விழிப்பையும், நியாயமான ஆசைகளையும் நான் இங்கு தெரிவிக்காமற்போனால் எனது கடமையிலிருந்து தவறியவனாவேன்.

"முடிவாக, ஏதாவது உருவாகச் செய்தாகவேண்டும் என்று தென்னகம் கோருகிறது. குறைந்தது, சேலம்—பெங்களூர் இரயில் பாதை அமைக்கும் திட்டத்தையாவது உடனடியாக நிறைவேற்ற முன்வரவேண்டுமெனக் கோருகிறேன்."

இந்த வெறியருக்கு...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தாடையைப் பிடித்துத் தடவித் தடவி கொஞ்சினர்; கெஞ்சினர்!

இந்தக் கொஞ்சுதலுக்கும் கெஞ்சுதலுக்கும்தான 'யமுனா நதி தீரத்தார்கள்' வெறுப்புக் காட்டினார்கள்!

சரித்திரம் திரும்ப திரும்ப நிகழ்கிறது, ஆனல் வேறு வேறு வழிகளில்!

1948 மார்ச்சில், தென்னகத்தார் ஒருவர் இந்தியைப் பற்றிப் பேசியபோது **மௌனம்!** வடநாட்டின் அலட்சியத்தையும், ஆதிபத்யத்தையும் பற்றி அச்சம் தெரிவிக்கும்போது **சிரிப்பு!**

1959, மார்ச்சில் தென்னகத்தார் ஒருவர் உணவுப் பிரச்னையைப் பற்றிப் பேசும்போது—இந்தியாவின் முடிசூடா மன்னரான நேருவையே தாக்கும்போது **மௌனம்!** இந்தியைப்பற்றிப் பணிவான வேண்டுகோள் விடும்போது **சீற்றம்!**

பதினோரு ஆண்டுகளில் சரித்திரம் திரும்புகிறது! ஆனல் வேறு திசையில்!

'தியாகம் பல செய்து, இந்தியாவின் புகழை உலக அரங்கில் உயர்த்திய காந்தியின் வாரிசான **நேருவைக்கூட** இழக்கத் தயாராகி விட்டார்கள், வடவர்கள்!

ஆனல், இந்தியெனும் வஜ்ராயுதத்தைக் கொண்டு வட்டார மொழிகளின் குரல்வளையை அறுக்கும் புனிதத்தொழிலை மட்டும் விடத் தயாராகவில்லை!

"நேருவா, இந்தியா?"-என்று கேட்க நேர்ந்தால் வடவரின் ரத்தம் தோய்ந்த கரங்கள் இந்தி மொழியின் பக்கமே உயரும் என்பதை இந்த நிகழ்ச்சி நிரூபித்து விட்டது!

இந்த நிகழ்ச்சியைப் பற்றி திரு. அவினசியார் என்ன நினைத்திருப்பாரோ; — எந்த முடிவை நோக்கி ஓடியிருப்பாரோ; நாமறியோம்!

ஆனல் "ஏகபாரதம்" என்றும், "நாமெல்லாம் இந்தியத் தாயின் புதல்வர்கள்" என்றும், "பாரத மணிக் கொடியைக் காக்க வாரீர்" என்றும் பேசிய திரு. அவினசியாரின் உள்ளம் இந்த வடநாட்டுக்காரரின் ஆதிபத்ய வெறியுணர்வைக் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும், பகுத்தறியும் உள்ளம் அவருக்கு இருக்கிறதென்றல்! இத்தனைக்கும் அவர் என்ன தேர்தல் காலத்தில் பதவி மின்னலுக்குப் பிறகுத் தோன்றும் 'காளான் காங்கிரஸ்' காரரா? இல்லை!

பழையவரான இவர் தன் தாய் நாட்டின் மனக்கொதிப்பை அப்படியே வெளியிடாது பக்குவமாக, சுதி குறைத்து, ராகம் மாற்றி வெளியிட்டும்கூட அந்தப் 'பனிப் பிரதேச' வடவர்களுக்கு ஈரம் பிறக்கவில்லை! மாறாக வெறுப்புக் காட்டுகிறார்கள்!

சாக்குப்பைக் கதர் உடுத்திய பொம்மைகளாய் ஆயிரம் மைல்கள் கடந்துபோய் மொழிபுரியாத நாட்டில் 'பிதுபிது' என விழித்து விட்டு விடு திரும்பும் தமிழக எம். பி. களுக்கு இந்த நிகழ்ச்சி கொஞ்சமாவது ரோஷ உணர்ச்சியை ஏற்படுத்தாதா? தாய்நாடு அன்னியனின் கொடுமைக் கால்களால் துவைத்து நொறுக்கப் படுகிறது என்பதை அவர்களின் 'தூங்கும் இதயங்களுக்கு' இந்தச் சோக நிகழ்ச்சி உணர்த்தாதா?

சூடும் சொரணையும், மானமும் ரோஷமும் இனியாவது அவர்களின் இதயங்களில் குடியேருதா?

—அடியார்

கொள்கை விளக்க நாடகங்கள்

★

[தி. மு. க.]

நகரசபைத் தேர்தல் நிதிக்காக

6-8-59 இரவு 10 மணிக்கு
கோவை சாமி தியேட்டரிலும்,

8-8-59 இரவு 10 மணிக்கு
மதுரை தமுக்கம் மைதானத்திலும்,

மு. கருணாநிதி எம். எல். ஏ.
நடிக்கும்

உதயசூரியன்

நாடகம்,

எம். என். கிருஷ்ணன், மனோரமா, மற்றும்
எம். என். கே. யின் முரசு நாடக மன்றத்தார் நடிப்பர்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு